முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 1/2020

அரசுதரப்பு 1-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | வயது | : | 48 |
| தந்தை/கணவர் பெயர் | : | கலியபெருமாள் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 04.12.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், குடந்தை கோட்டம், தஞ்சாவூர் புறநகர் பிரிவில் ஓட்டுநராக உள்ளேன். சம்பவ காலத்தில் 11.12.2018 ல் நானும், பாலகிருஷ்ணன் நடத்துனரும் TN 68 N 0635 தடம் எண். 241 E தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு டிரிப் எடுத்தபோது தாமரைகுளம் என்ற இடத்தில் 3 நபர்கள் பல்சர் பைக்கில் வேகமாக வந்தார்கள். கோலிகுண்டு போல ஒன்றை எடுத்து கண்ணாடியை அடித்து விட்டார்கள். கண்ணாடி சேதமடைந்து விட்டது. கோலிகுண்டால் அடித்தவர்கள் யார் என்று தெரியாது. பின்னர் டெப்போவிற்கு தகவல் கொடுத்தோம். பயணிகளை வேறு வண்டிக்கு மாற்றி விட்டு காடாம்புலியூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் அசாஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - கோர்ட்டில் சொன்ன விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 1/2020

அரசுதரப்பு 2-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | வயது | : | 60 |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 04.12.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், குடந்தை கோட்டத்தில், நடத்துனராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். 11.12.2018 அன்று சம்பவம் நடந்தது. தஞ்சாவூர் சென்னை TN 68 N 0635 தடம் எண். 241E என்ற பேருந்தில் நடத்துனராக இருந்தேன். நெய்வேலியில் டிக்கெட் ஏற்றி கொண்டு தாமரைக்குளம் என்ற இடத்தில் வரும்போது கண்ணாடி சத்தம் கேட்டது. முன்பக்கமுள்ள பெரிய கண்ணாடி உடைந்து விட்டது. டிரைவர் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு பார்த்தபோது 3 பேர் வண்டியில் போனார்கள். கோலிகுண்டால் அடித்து கண்ணாடி உடைந்தது. டெப்போவில் தகவல் சொல்லி விட்டு காடாம்புலியூர் காவல்நிலையத்தில் ஓட்டுநர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 1/2020

அரசுதரப்பு 3-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அறிவழகன் | வயது | : | 47 |
| தந்தை/கணவர் பெயர் | : | கலியமூர்த்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 04.12.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது காடாம்புலியூரில் குடியிருக்கிறேன். 11.12.2018 அன்று மாலை 4.15 மணிக்கு காடாம்புலியூர் தாமரைகுளம் அருகே கும்பலாக இருந்தார்கள். பஸ் கண்ணாடி உடைந்ததாக கேள்விப்பட்டேன். கண்ணாடியை உடைத்தவர்கள் யார் என்று தெரியாது. போலிசார் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள்.

சாட்சி பகுதியாக பிறழ்சாட்சியாக மாறியதால் அனுமதி கோரப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 11.12.2018 அன்று காடாம்புலியூர் புவனேஸ்வரி வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது சென்னையை நோக்கி TN 68 N 0635 என்ற அரசு பேருந்து சென்று கொண்டிருந்தது. அப்போது கருப்பு நிற பல்சர் TN 45 AH 9217 என்ற இருசக்கரவாகனத்தில் பார்த்தால் அடையாளம்

காட்டக்கூடிய நபர்கள் தாமரைக்குளம் கிருஷ்ணாநகர் அருகில் பேருந்தின் முன்பக்க பெரிய கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியதாகவும், கொள்ளுகாரன் குட்டையை நோக்கி சென்று விட்டதாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை